செ.வெ.எண். 08 நாள்:26.01.2017

**பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்திய குடியரசு தினவிழாவில் மூவர்ண தேசிய கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செய்து, 2 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.16,50,000 மதிப்பிலான காசோலையினையும், 61 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களையும் சிறப்பு அதிகாரி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்!!**

பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்திய குடியரசு தினவிழா இன்று (26.01.2017) சிறப்பாக நடைபெற்றது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர், தேசிய மாணவர் படை மற்றும் சாரண, சாரணியர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, 5 பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவிகளின் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மகளிர் சுயதொழில் தொடங்கிட சுயஉதவிக் குழுவினருக்கு கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்கள் அன்னை மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.9.00 இலட்சத்திற்கான காசோலையினையும், வானம்பாடி மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.7.50 இலட்சத்திற்கான காசோலையும் என மொத்தம் ரூ.16 இலட்சத்து 50 ஆயிரத்துக்கான நேரடி வங்கிக்கடன் காசோலைகள் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாக பணியாற்றியமைக்காக 61 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மாணவ/மணவியர்களுக்கும், அணிவகுப்பில் கலந்து கொண்ட தேசிய மாணவர் படை, சாரண, சாரணியர், கலர் பார்ட்டி மற்றும் வாத்தியக்குழுக்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையர் (பணிகள்) திரு.க.சு.கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள், துணை ஆணையர் (கல்வி) திரு.மா.கோவிந்த ராவ், இ.ஆ.ப. அவர்கள், துணை ஆணையர் (சுகாதாரம்) திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப. அவர்கள், துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) திரு.வெ.அன்புச்செல்வன், இ.ஆ.ப., அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.பிரவீண் பி நாயர், இ.ஆ.ப. அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப. அவர்கள், தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப. அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**